# இயல் - நான்கு - 18MTA34C

## ஆராய்ச்சி நெறிமுறைகள்

**கள ஆய்வு:** கள ஆய்வு சில்துறை ஆய்வுகளில் மிகவும் இன்றியமையாததாக அமையும். வரலாறு கல்வெட்டு மண்பாட்டாய்வு, நாட்டுப்புறவியல், சமூகவியல், மொழியியல் போன்ற துறைகளில் கள ஆய்வின் வழியாகச் சிறப்பான முடிவுகளை பெற முடியும்.

**திட்டமிடல்:** கள ஆய்வுக்குச் செல்வோர் அங்கு நிகழ்த்தும் ஆய்வுக்குரிய திட்ட முன் வரைவோடு செல்ல வேண்டும். செல்லும் வழி, தங்குமிடம், உடன் கொண்டு போக வேண்டியன, களத்தில் தொடர்புகொள்ள வேண்டியவர்கள், தொகை, மாற்றுடைகள், மருந்துகள், கடிதங்கள், கைவிளக்குகள், வழிகாட்டி இவை சரியாக திட்டமிட வேண்டும்.

**கள ஆய்வு முறைகள்** கள ஆய்வு செய்வோர் மொழியை மட்டுமே உரிய கருவியாக எண்ணி அதன் வழியாகப் பெறும் செய்திகளை மட்டுமே ஏற்கும் மனநிலையைப் பெற்றுவிடக் கூடாது. களத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கூர்மையாகப் பார்க்க வேண்டும். கள ஆய்வில் (1) தனி மனிதரை நேர்காணல், (2) பத்துப் பதினைந்து பேர்களின் நடவடிக்கைகளை ஆராய்தல், (3) பெருங் கூட்டத்தை (அல்லது) ஊர் உறை மக்களின் போக்கை ஆராய்தல் என கள ஆய்வு முறையை அமைக்க வேண்டும்.

**நேர்காணல்:** நேர்காணல் என்பது கேட்பவருக்கும் விடை கூறுபவருக்கும் இடையில் அமைந்த தொடர்பு இருவழி உரையாடல் அன்று, சைகைகள், பார்வைகள், மெய்ப்பாடுகள், மெல்லிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முறைகளை உள்ளடக்கியது நேர்காணல்.

**வினா நிரல்** வினா நிரல் பல்வேறிடங்களில் சிதறிக்கிடக்கும் மக்களிடம் இருந்து பயன் தரும் தகவல்களைத் திரட்ட வினா நிரல் பயன்படுகிறது.

# களஆய்வு
## (Field Study)

களஆய்வு (Field Study) சில துறை ஆய்வுகளில் மிகவும் இன்றியமையாததாக அமையும். வரலாறு, கல்வெட்டு, அகழ்வாய்வு, பண்பாட்டாய்வு, நாட்டுப்புறவியல், பேச்சுமொழி, பொருளாதாரம், சமூகவியல், கடலியல், நிலஇயல், வானியல் போன்ற துறைகளில் களஆய்வின் வழியாகச்சிறப்பான முடிவுகளை எய்த முடியும். வணிகக் கப்பல்களைச் செலுத்தப் புதிய கடல்வழியைக் கண்டதும், இமயமலையின் உயர்ந்த முடியைச் சென்றளந்தறிந்ததும், உலகப் போர்களின் கொடும்பாடுகளைக் குண்டு வீச்சு நிகழ்ந்த இடங்களுக்குப் போய் ஆராய்ந்து உணர்ந்ததும், இன, மதப் பூசல்கள் நிகழ்விடங்கட்குச் சென்று அவற்றின் அடிப்படைகளைத் தெரிந்து தேர்ந்ததும், தமிழகத் தென்மாவட்ட மலைகளில் சமணர் கற்படுக்கைகளில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகளைப் படியெடுத்ததும், ஈமப் புதைகுழிகளைப் பலவிடங்களில் அகழ்ந்து காட்டியதும் களஆய்வின் குறிப்பிடத்தக்க செயல்களாகும். நூல்களின் வழியாகவும், சோதனைச் சாலைகளின் வழியாகவும் செய்யப்படும் ஆய்வினின்றும் களஆய்வு வேறுபட்டதாகும். நிகழ்ச்சிக்குரிய இடங்கள், தொடர்புடைய மக்கள், விலங்கு பறவையினங்கள், தாவரங்கள், மண்ணின் இயல்புகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் களஆய்வில் ஆராய இயலும்.

### களஆய்வு விளக்கம்

இராபர்ட் பார்க் (Robert Park) என்ற வழிகாட்டி தம் மாணவர்களிடம் ஒரு முறை கூறியதாவது :

> "நீங்கள் நூலகத்திற்குச் சென்று தேடுமாறு அறிவுறுத்தப்படலாம்; நீங்களும் நிறையக் குறிப்புக்களையும் தூசு தும்புகளையும் திரட்டிக் கொள்ளலாம். களைத்துப்போன அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு, இசைவற்ற விண்ணப்பக்காரர்களாலும், அலட்சியப்போக்குடைய எழுத்தர்களாலும் நிரப்பப்பெற்ற அற்பமான பட்டியல்களை உள்ளடக்கிய வழக்கமான பதிவேடுகளிலிருந்து ஆய்வுச் சிக்கல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு உங்களுக்குச்

சொல்லித்தந்திருக்கலாம். இதுதான் உண்மையான ஆய்வினால் உங்கள் கைகளை அழுக்காக்கிக் கொள்வதாகும். உங்களுக்கு ஆலோசனை வழங்குவோர் அறிவும் நேர்மையும் உடையவர்களே. அவர்கள் கூறும் காரணங்கள் பெரும் மதிப்புடையனவே. ஆனால் இவற்றுக்கு மேலாக ஒன்று கவனிக்கத்தக்கதுண்டு. அதுதான் முதல் நிலை நோக்கு (**First hand observation**). ஆடம்பர உணவுவிடுதிகளின் வரவேற்பறைகளில், இடிந்த வீடுகளின் வாயிற்படிகளில், கடற்கரைகளில், நிலைகுலைந்த சேரிகளில், இசையரங்குகளில், காட்சிக் கூடங்களில் சென்று அமருங்கள். அமர்ந்து உங்கள் ஆடைகளை அழுக்குப் படுத்திக்கொள்ளுங்கள்."[1]

இதன் கருத்தென்ன? நேரடியான அறிவு ஆய்வுக்குப் பயன்படுவதுபோல் வேறு எதுவும் பயன்படாது என்பதேயாகும். அவர்களுடைய சொந்த அறிவால் நேர்முகமாகச் சிக்கலை அவர்கள் அணுகவேண்டும் என்பதே இங்கு வற்புறுத்தப்படும் கருத்தாகும். மக்கள் பணிசெய்யும், வாழும் இடங்களில் அமைந்த உண்மையான சூழல்களில் ஆய்வின் பரிமாணம் சிறந்தமையும் என்று கூறுவர் சாட்சுமன், ஸ்டிராஸ் ஆகியோர். முன்பின் அறிமுகமில்லாத ஒரு பண்பாட்டை, நாகரிகத்தை ஆராயத் தலைப்படுவோர், அத்தகைய மக்கள் வாழிடங்களுக்குச் சென்று அங்கேயே பல்லாண்டுகள் தங்கி அவர்களில் ஒருவராகவே ஆகின்றனர். வில்லியம் ஒயிட் என்பவர் தாம் மேற்கொண்ட மாந்த இனவியல் ஆய்விற்காகப் பாஸ்டன் நகரின் வடகோடியில் இரண்டாண்டுகள் சென்று அவர்களோடு சேர்ந்து வாழ்ந்தார். நீக்ரோக்களோடு ஓராண்டுக்காலம் உடன் தங்கியிருந்து இலியட் லைபௌ என்பவர் 'டேலிசு கார்னர்' என்ற தம் நூலை எழுதினார். திருநெல்வேலிச் இடையன்குடியில் பல்லாண்டுகள் தங்கியிருந்த கால்டுவெல், திருநெல்வேலிச் சரித்திரத்தை வரைந்தார். இராபர்ட்-டி-நொபிலி, சுவார்ட்சு பாதிரிமார்கள் தமிழக மக்களோடு கலந்து பழகித் தம் மதக் கருத்துக்களை அவர்களிடம் எடுத்துரைத்தனர். அல்பர்ட்டோ மொராவியோவின் 'பாரிசு நகரத்தில் அந்நியன்' என்ற புதினத்தின் கதாநாயகன் பாரிசு நகரத்தில் விலைமகள் ஒருத்தியோடு தங்கியிருந்து அவளுடைய வாழ்க்கைச் சிக்கலை ஆராய்ந்துணர்வதாகக் காட்டப் பெறுகின்றான். தமிழக நல்லாசிரியர் ஒருவர் நரிக்குறவர்களோடு சென்று தங்கி, நரிக்குறவப் பெண்ணை மணந்து கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைப் போக்குக்களை ஆராய்வதோடு அச்சமூக முன்னேற்றத்திற்கும் பணிபுரிகின்றார்.

நூல்களில், அறிக்கைகளில், செய்தித்தாள்களில் காணப்பெறும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி குறித்த செய்தி முழுமையானதாகவும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் காணப்பட்டதாகவும் இல்லாமல் போகலாம். எனவே

1. John B Williamson & Others, **The research craft** Op. 198.

நேரடியாகக் களத்துக்கே ஒருவர் சென்று பலரையும் நேர் காணல் வழி அறிந்து, உற்றுநோக்கி, உடன் தங்கியிருந்து உண்மைகளை நேரடியாக அறிந்து கொள்ளக் கள ஆய்வே பேருதவி புரியும்.

ஒரு கோயில், ஓவியக்காட்சி, சிற்பம், கலவரம் நிகழ்ந்த இடம், திருமண நிகழ்ச்சி, ஓர் இயற்கைக் காட்சி, பாதிக்கப்பட்ட மக்களின் நிலை, தொழிற்சாலை ஒன்றின் செயற்பாடு, பல்வேறு குழுக்கள் அமைந்த ஒரு நிறுவனத்தின் செயற்பாடு, ஒரு கோளின் இயக்கம் ஆகியன கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டாலன்றி அவற்றோடு தொடர்புடைய உண்மைகளை முற்றிலும் சரியாக உணர இயலாது.

வில்லியம் புட் ஒயிட் (Villiam Foote White) என்பவர் 'களத்திலிருந்து கற்றுக் கொள்ளுதல்' என்ற தம் விழுமிய நூலில் (Learning from the field) உரைப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

> "நான் வரலாற்றை எப்படிப் படிக்கவேண்டும் என்று சொல்லப்போவதில்லை. ஆனால் என்னுடைய ஓர் அனுபவத்திலிருந்து வரலாற்றாராய்ச்சியின் இன்றியமையாமை பற்றிக் கூற இயலும். இறுதியாக என் படிப்பு எப்படிக் கள ஆய்வுக்கு வழிகாட்டியது என்பதையும், கள ஆய்விலிருந்து கற்றுக் கொண்டன படிப்பை எப்படித் துலக்கிய தென்பதையும் நான் கூறுவேன்."[1]

என்றுரைக்கின்றார். கள ஆய்வு கற்ற கல்வியைத் தெளிவுறுத்தும்; ஐயங்களைத் துடைக்கும். அறிஞர் ஒயிட்,

> "எனக்கு வழிகாட்டக் கூடும் வாய்ப்புகளை மறுக்காமல், வீதி ஓரத்திலிருந்து பண்ணைவரையிலும், தொழிற்கூடத்திலிருந்து அலுவலகங்கள் வரையிலும், அந்தந்த அமைப்பின் மனிதத் திறன்களையும் அறிவாற்றல்களையும் பயன்படுத்தி அடிநிலையில் இருக்கும் மனிதனின் நலத்தை மேம்படுத்தவும், சமூக - பொருளாதார நிலைகளில் வலிமைபெறச் செய்யவும் கூடும் வரையில் இவ்வமைப்புகளைத் திறனுடையனவாக ஆக்குவதுமே என் குறிக்கோளாக இருந்தது."[2]

என்கிறார். மிக நீண்ட காலம் கள ஆய்வு அனுபவமுடைய ஒருவர் இத்தகு உயர்ந்த நோக்கிற்காகக் கடுமையாக உழைத்திருக்கிறார்.

1. Learning from the field, Willam Foote White P. 12.
2. Op. cit. 21.

## கள ஆய்வில் மேற்கொள்ளத் தக்கன

கள ஆய்வு செய்வோர் செய்ய வேண்டுவனவாகக் கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடலாம். 1. ஆய்பவரின் நோக்கு, 2. திட்டமிடுதல், 3. களத்தொடர்புகள், 4. ஆய்வு முறைகள், 5. நேர்காணல் உத்திகள், 6. கள ஆய்வு அறம் இவற்றை ஒவ்வொன்றாக ஆராயலாம்.

## ஆய்பவரின் நோக்கு

கள ஆய்வு மேற்கொள்பவர் புலனைந்தாலும் தன் ஆய்வுக்குரிய களத்தை அளந்தறிய வேண்டும். ஆய்வுக்குட்படுத்தப்படும் மக்களில் ஒவ்வொரும் எத்தகையவராக இருக்கிறார், குழுநிலையில் எப்படி இயங்குகிறார், அவர்களுக்குப் பிடித்தமானவை, பிடிக்காதவை, அவர்களிடம் பேசக்கூடியவை, பேசக் கூடாதவை, அவர்களின் பழக்கவழக்கங்கள், அவர்கள் தவறாக நினைப்பன, சரியாக ஏற்றுக் கொள்வன ஆகியவற்றைக் குறித்து ஆய்வாளர் நோக்கி அறிந்தநிலையிலேயே கள ஆய்வு தொடர வேண்டும். மானிடவியல் அறிஞரான பிலோ இருதயநாத் காடர்கள் என்ற பழங்குடியினரைப் பற்றிக் கள ஆய்வு மேற்கொண்ட அனுபவங்களை அழகுறக் கூறியுள்ளார்.

> ''காட்டில் காடர்களின் குடிசையில் வாரக்கணக்கில் நானும் அவர்களுடைய 'ஒரு சகோதரன்' என்ற எண்ணத்துடன் பழகியபொழுதுதான் அவர்கள் வாழ்வின் இன்பத்தை முழுவதும் உணர முடிந்தது.
>
> நான் காடர்களிடம் 'என்னுடைய தாத்தாவுக்குத் தாத்தா பல ஆண்டுகளுக்கு முன் உங்களைப் போலவே வாழ்ந்தார்'என்று கூறியபொழுது அவர்களுக்கு உண்டான இன்பத்தை என்னால் எழுத இயலாது. ஆதிவாசிகள் இரவில் தீமூட்டிக் கொண்டு விடிய விடிய நடனமாடுவார்கள். செய்திகளைச் சேகரிக்க நானும் அவர்களுடன் தழைகளைக் கட்டிக் கொண்டு நடனமாடுவேன்.''[1]

என்று அவர்களோடு கலந்து வேற்றுமையின்றிப் பழகியதைக் குறிக்கின்றார். இந்த நிலைக்குப்பிறகு அவர்களை ஆராய்வது எளிதாகும். பழங்குடிமக்கள் என்போர் வாழும் நூல்கள்; அவர்களைப் படிக்க வேண்டுமேயன்றி, அவர்களின் பழக்க வழக்கங்களைக் குறை கூறுவதும், அவர்களைத் தாழ்வாகக் கருதுவதும் தவறாகும்.

---

1. யார் இந்த நாடோடிகள். பிலோ இருதயநாத் ப. Vi

வரலாற்றுத் தொடர்பான கள ஆய்வு மேற்கொள்வோர் தெளிந்த வரலாற்றறிவு வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். ஆய்வுக்களத்திற்குச் சென்று நிகழ்த்த வேண்டிய பணிகளைக் குறித்து ஒரு விவர அறிக்கையை உடன்கொண்டு செல்ல வேண்டும்.

கல்வெட்டு ஆய்வு நிகழ்த்துவோரும், அக்களத்திற்குரிய வரலாற்றுப் பின்புலத்தை முன்னரே கணித்தறிந்து கொண்டு செல்வது நல்லதாகும். நாட்டுப்புற மக்களைக் குறித்த பண்பாட்டாய்வுக்குச் செல்வோர், தாம் அவர்களின் மீது ஈடுபாடு கொண்டுள்ளமையினையும், தம் நோக்கம் உயர்ந்தது என்பதையும், தக்கவர் வழிப் புலப்படுத்த வேண்டும்.

## 2. திட்டமிடுதல்

கள ஆய்வுக்குச் செல்வோர் அங்கு நிகழ்த்தும் ஆய்வுக்குரிய திட்ட முன் வரைவோடு செல்ல வேண்டும். செல்லும் வழி, தங்குமிடம், உடன்கொண்டுபோக வேண்டியன, களத்தில் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் பற்றிய விவரங்கள், அவர்களுக்குரிய அறிமுகக் கடிதங்கள், செலவுக்குரிய தொகை, மாற்றுடைகள், மருந்துகள், கடிதங்கள் கைவிளக்குகள் ஆகியவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

> "காடுகளுக்குப் பிரயாணம் செய்வதற்குமுன் பிரயாணத்திற்கு வேண்டிய சுமார் இருபது சாமான்களை என் குறிப்புப்படி, எடுத்துக் கொள்ளுவேன். தக்க வழிகாட்டியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு காட்டினுள் பிரயாணம் செய்ய வேண்டும். வழிகாட்டியைத் தேர்ந்தெடுப்பதே ஒரு தனிக்கலை. வழிதெரியாத வழிகாட்டியைத் தேர்ந்தெடுத்தால், நமக்குக் காட்டில் பல இன்னல்கள் உண்டாகும் என்பது திண்ணம்... வழிகாட்டி அல்லது சிக்காரி அல்லது காட்டில் அடிக்கடி மரம் வெட்டிப் பழக்கமுள்ளவர்கள் தவிரப் புதிதாகத் துப்பாக்கி எடுத்துக்கொண்டு காட்டினுள் அடி எடுத்து வைக்க யாராலும் முடியாது என்பது திண்ணம். யாருடைய உதவியுமில்லாமல் துப்பாக்கி இருந்தால் போதும் என்ற எண்ணம் முற்றிலும் குற்றமே"[1]

இவ்வாறு நாம் செல்லும் இடத்தை அணுகும் வரை மிகவும் பாதுகாப்புக்குரிய நெறிகளை மேற்கொள்ள வேண்டும். ஜோஸ் மரீனா என்ற கத்தோலிக்கத்துறவி, கார்னியல் பல்கலைக்கழகத்திலிருந்து, கிராமங்களுக்கிடையேயான தொடர்புகள் (Intervillage system) என்பது குறித்து ஆராய டொமினிகன் குடியரசுக்குச் சென்றார். அவர் அப்பகுதிக்குச்

1. மேலது ப. 16.

சென்றபோது அங்குப் புரட்சி ஏற்பட்டிருந்தது. புரட்சிக்காரர்கள் நகரத்தைக் கைப்பற்றியிருந்தனர். அந்நகரமக்களுக்கு வேண்டும் உதவிகள் புரிவதில் இறங்கிய மரீனோ ஆராய்ச்சியை மறந்தார். உணவு, மருத்துவ உதவி ஆகியவை மக்களுக்குக் கிடைக்க வழிசெய்தார். இதனால் புரட்சிக்காரர்களுக்கும் மரீனோவுக்கும் நெருங்கிய தொடர்பேற்பட்டது. புரட்சியாளர்களிடம் நேயம் கொண்ட துறவியார் அவர்களின் பொருட்டாக எக்கைம்மாறும் எதிர்பாராமல் மக்கள் தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பின்பு கள ஆய்வு ஏதும் செய்யாமல் வந்த அவரை ஆய்வுக்குழுவினர் தவறாகக் கருதவில்லை, கிராமங்களைக் குறித்த ஆய்வுகளை எப்போதும் செய்துகொள்ளலாம், ஆனால், புரட்சி நிகழ்ந்த நாட்டில் ஒரு சமவுடைமைத் துறவி பணிப்பங்கேற்றது பெரியசெயல் எனக் கருதினர்.[1] இதனால் திட்டமிட்டபடி செயல் நடக்கவில்லை என்பதறியப்படும். மரீனோவுக்கு நிகழ்ந்ததுபோலத் தவிர்க்க முடியாத ஓர் நிகழ்ச்சி நம் கள ஆய்வுக்குத் தடையாக வரின் குற்றமில்லை. ஆனால், நம் உடல்நிலையும், விடுமுறை எதிர்பார்த்தபடி கிடைக்காமையும், இல்லத் திருமண நிகழ்ச்சியும் பிறவும் நம் திட்டமிடலைக் குலைத்தன எனில் நமக்கு ஆராய்ச்சியில் வலிவான பற்று இல்லை என்பது விளங்கும்.

கள ஆய்வுக்கு ஒரு திட்ட வரைவுடன் செல்வோர் அவ்வரைவே உறுதியானதும் இறுதியானதும் என்று கொள்ளக் கூடாது; கொள்ளவும் இயலாது. கள ஆய்வின் ஒவ்வொரு படிநிலையிலும் இவ்வரைவு மாறுதல் எய்தக்கூடும். தண்ணீருக்காக ஓரிடத்தில் குழாய் இறக்கியபோது பெட்ரோல் வெளிவந்தால் திட்டம் மாறாமலா இருக்கும்? அதுபோல ஒன்றிற்காக அமைந்த திட்டம் வேறொன்றாய் மாறுதலுண்டு. இந்தியாவிற்கு வழி காணச் சென்ற கொலம்பசுக்கு அமெரிக்கா காணக்கிடைத்ததுபோல் திட்டங்களை மாற்றும் நிகழ்ச்சிகள் இயற்கையாகவே நடத்தல் உண்டு. சமயம் பரப்பும் நோக்கத்துடனேயே வந்த ஜி.யூ. போப் தமிழகம் வந்து திருக்குறளையும் திருவாசகத்தையும் மொழி பெயர்க்க நேர்ந்த நிகழ்ச்சிகள் திட்டமிட்டவற்றிற்கு மாறானவையே. எனவே களஆய்வு செய்வோர் தாம் திட்டமிட்ட ஆராய்ச்சி செய்வதைக் களத்திற்கு வந்தபின் மாற்றிக்கொண்டு வேறு ஒன்றை அக்களத்திலிருந்து செய்வது சரியானது என எண்ணினால் அதனைச் செய்வது மிகவும் வரவேற்கத்தக்கதே. நம் அறிவாற்றல்களும், செயல்திறன்களும் எதனைக் குறித்து நன்றாகச் செயல்படுமோ, எந்த ஆராய்ச்சி சமுதாயப் பயன்பாட்டை மிகுதியாய் விளைக்குமோ எதற்கு ஆய்வுக்களம் மிகப் பொருத்தமாகப் பயன்படுமோ, அதற்குரியதாக ஆய்வுத் தலைப்பை மாற்றிக்கொள்ளலாம். தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளவே காந்தியடிகள் சென்றார். அங்குச் சென்று

1. So far as we knew this was the only rebellion within which a sociologist had played a participant observer rule. - William Foote White Op. cit. P. 31.

அவர் சூழலை ஆராய்ந்தபோது வழக்கறிஞர் தொழில் செய்து பொருள் ஈட்டுவதினும் அங்குள்ள இந்தியர்களுக்காகப் போராட வேண்டியதன் தேவையை உணர்ந்தார். அதனை நோக்கியதாகத் தம் திட்டத்தை அவர் மாற்றியமைத்துக் கொண்டார். இத்தகைய மாற்றங்கள் கள ஆய்வினால் நிகழக்கூடியவையே.

கள ஆய்வுக்குச் செல்வோர் எந்நிலையிலும், அங்குள்ள தனிமனிதர்களின், அமைப்புக்களின் அதிகார எல்லைகளை ஊடுருவிப் போக முயற்சி மேற்கொள்ளக் கூடாது. ஒற்றராகவும், காவலராகவும், படைவீரர்களாகவும் செல்வது போன்ற மனப்பாங்கு ஆய்வாளருக்கு இருத்தல் கூடாது. அங்கங்கு ஒவ்வோரெல்லையிலும், நம் வரவை இயல்பாகச் சோதிப்பவர், விவரம் கேட்பவர் **(Unofficial Gate Keepers)** ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கவேசெய்வர். அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்திய நிலையிலேயே கள ஆய்வு தொடங்கிட இயலும். கட்டுப்பாடுகள் மிக்க சில சமூகங்களில் உட்புகுந்திடல் எந்த நிலையிலும் இயலாது. இதனைக் குறித்துத் திட்டமிடும் போதே எண்ணுதல் வேண்டும். அயலாருக்கு முன் வராத பெண்களைக் கொண்ட சமூக அமைப்புக்களில் அப்பெண்களைக் குறித்த கள ஆய்வைப் பெண்முகவர்கள் வழியிலும், அவர்களின் தந்தையார், உடன்பிறந்தோர், சமயத்தலைவர் போன்றோரைக் கொண்ட சுற்றுவழியிலும், வினாநிரல், கடிதம் போன்றவற்றின் வழியிலும் இவ்வகை ஆய்வை மேற்கொள்ள வேண்டும். பழமைப்பிடிப்புள்ள சமூக அமைப்புக்களில் வயதுக்கு வந்த பெண்கள், இளமகளிர் போன்றோரைத் தனியே அணுகி வினாக்கள் கேட்க இயலாது. பெண்கள் அனைவரிடமும் பாலுணர்வு, உடல்தொடர்பு, பால்வினைநோய் போன்றவை குறித்து வினாக்கள் தொடுத்தல் இயலாது. படித்த சமூகத்தில் மேற்கொள்ளும் முறைகளைக் கொண்டு எல்லாச் சமூகங்களுக்கும் ஒரேவகையான ஆய்வுத்திட்டத்தை மேற்கொள்ளக் கூடாது. அயலார்க்கு நுழைவு மறுக்கும் சமூகங்களைக் (Closed society) கள ஆய்வு முறையில் அணுகலுக்குத் தனி வகையான திட்டமிடுதல் வேண்டும்.

### 3. களத் தொடர்புகள்

களத்தின் சூழலை ஒட்டி ஆய்வாளர் ஒவ்வொரு நிலையிலும் பொய் சொல்லத் தூண்டப்படலாம். பொய் சொல்வதே தமக்குப் பாதுகாப்பு என்றும் கருதலாம். அவர் பல பொய்கள் கூறிப் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று கருதும் போதே அப்பொய்கள் வெளிப்படின் அவர் நிலை என்ன ஆகும் என்பதும் எண்ணுவதற்குரியது. கண்ணாடி போல் தன்னைத் தெளிவாகக் காட்டிக் கொள்ளுதல், பாலும் பளிங்கும் போலத் தூய்மையாக இருத்தல், கடிவாளம் கட்டிய குதிரைபோல ஆய்வொன்றினையே கருதிச் செல்லுதல் ஆகியன கள ஆய்வுத் தொடர்பில் ஆய்வாளர் கொள்ள

வேண்டியன. அப்பம் தின்னப்போகிறவர் குழிகளை எண்ணிக் கொண்டிருத்தல் வீணானது. களத்தினரின் அறியாமை, எளிமை ஆகியவற்றை இகழும் வகையில் பேசாமை இன்றியமையாதது. அவர்களின் பண்பாட்டுக் கொவ்வாத வகையில் பேசுதலும் நடத்தலும் கூடாது. அவர்களுடைய குடிமரபு, சாதிப்பிரிவு, மதச்சார்பு, அரசியல் நோக்கம், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றைப் பேசாமல், அவர்களைக் காயப்படுத்தாத பொதுச்செய்திகள், பெரும்பாலும் ஆய்வு நோக்கியவை பற்றிப் பேசுதல் நல்லது. பல கருத்துக்களும் கருத்துவேறுபாடுகளும் கொண்ட சமூகத்தை ஆராயப்புகும் ஒருவர், ஏதாவது ஒருபிரிவைச் சார்ந்து விடும்போது எண்ணற்ற தீர்க்க முடியாத சிக்கல்கள் உருவாகிவிடும். எனவே சார்பற்ற பொதுமையை இத்தகைய இடங்களில் ஆய்வாளர் கொள்ள வேண்டும்.

சில அமைப்புக்களில் வினாநிரல் ஒன்றை உருவாக்கிக்கொண்டு போய் ஒவ்வொன்றைக் கேட்பது பயனே தராது. அதற்கு மாறாக, அங்கிருப்பவர்களோடு சில நாட்கள் தங்கிப் பழகிவிடும் சூழலில், கேள்விகளைக் கேட்காமல், அவர்களாகவே நம் வினாக்களுக்குரிய விடையைத் தந்துவிடக் கூடும். அகநானூற்றில் நெய்தல் திணைப்பாடல் ஒன்றில் தலைவன் சொல்கிறான்:

> ''மிக உயர்ந்த பொருள்களையெல்லாம் கொண்டு போய் கொடுத்தலாலும் அவளைப் பெற இயலாதென்றால், நாம் வாழும் இடத்திலிருந்து அவள்வாழும் நெய்தல் நிலத்துக்கே சென்று தங்குவோம். அவளுடைய தந்தையோடு சேர்ந்து உப்பு விளைக்கும் முயற்சியில் இறங்குவோம். அவனோடு கடலில் கட்டுமரம் ஏறிச் செல்வோம். அவனிடத்துப் பணிந்தும் நெருங்கியும் பழகுவோம். நெஞ்சமே! இந்நிலையில் அவன் தன் மகளைத் தராது போய்விடுவானோ''[1]

கள ஆய்விலும் இப்படிப் பணிந்து பழகி, அவர்களுடைய மனங்கவர்ந்து பின்பு ஆய்வு நிகழ்த்துதல் நற்பயன்தரும். சிலமணிநேரத்தில் ஒரு புத்தகத்தைப் படிப்பது போன்றதன்று கள ஆய்வு. தொடக்கத்தில் சிலநாட்கள் பயனின்றிப் போகலாம். பிறகு சிறிது பயன் விளைக்கலாம். பிறகு தொடர்பு நன்கு ஏற்பட்டு விட்ட நிலையில், பயன் மிகுதியும் விளையும்.[2]

---

1. அகம். 280.
2. If we are successful in establishing a social base, we may find quite suddenly that we have broken through the superficial level, that we begin to see patterns and movement which were not evident before and at last we begin to get a vision of what it is we are really studying. - Willam Foote Whyte, Op cit. P. 69.

களஆய்வு என்பதில் நேர்காணல் உண்டு. அதில் சான்றோர்களையும், பெரியோர்களையுமே நேர்காண்பதில்லை. கொலையாளிகள், கொள்ளைக்காரர், கடத்தல்காரர், கற்பழிப்பு முதலான கடுங்குற்றம் செய்தவர்கள், திருடர்கள் ஆகியோரையும் நேர்காண வேண்டிவரும். எனவே இவர்களோடு தொடர்பு கொள்வதில் சில வேறுபட்ட உத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டிவரும். இத்தகைய கள ஆய்வுகளில் அவர்களுடைய செயல்களை நாம் சரியானவையே என்று ஒப்புக்காகக் கூடச் சொல்ல வேண்டியதில்லை. இந்தக் கள ஆய்வில், ஆய்வு செய்வோருடைய கருத்துக்கும் விளக்கத்துக்கும் இடமில்லை. ஆய்வு செய்யப்படுபவரை மனந்திறந்து பேசவைக்கும் முயற்சியே வேண்டும்.

களத்தொடர்புகளில் இன்றிமையா இடம்பெறுவது மொழி. நாம் செல்லும் களத்தின் பேச்சுமொழியை, வட்டார வழக்கை நன்றாக முன்னரே அறிந்து வைத்திருத்தல் பல இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதோடு நன்மையும் செய்யும். மணிமேகலையில் சாதுவன் என்ற வணிகன் நாகர்மொழியைத் தெரிந்து வைத்திருந்ததால், உயிர் பிழைத்ததோடு மட்டுமின்றிச் செல்வச் செழிப்புடன் ஊர்திரும்பவும் முடிந்தது. அவர்களுடைய மொழியில் பேசிவிட்டோம் என்றால் நாம் அவர்கள் மனத்தில் இடம்பெறுவதற்குரிய வாயிற்கதவைத் திறந்துவிட்டோம் என்பது பொருள். ஆனால் அதற்குரிய பொருள் தெரியாமல் பேசிச் சிக்கல்களை உருவாக்கிக் கொள்ளக் கூடாது. அரைகுறை அறிவு வேறு எவற்றையும் விடப் பேச்சுமொழியில் மிகப்பெரிய சிக்கல்களை உருவாக்கிவிடும். களத்தில் இருப்போரின் நடை, உடை, ஒலிப்புமுறை, பார்வை, பழக்கம் ஆகியவற்றைக் குறைவாக நாம் மதிக்கிறோம் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு தேசியப் பணி முகாம் குறித்து மாணவர்கள் உள்ளார்ந்த ஒரு சிற்றூருக்குச் சென்றனர். அங்கிருந்த சட்டை போடாத ஒரு பெரியவர் "வாங்கடா பொடியன்களா" என்று வரவேற்றார். இளைஞர்கள் மனத்தில் ஒரு வெறுப்பு முளைத்துவிட்டது. ஆனால் தொடர்ந்து அந்தப் பெரியவர் இளைஞர்களோடு பழகி, அவர்களுடைய தேவைகளைக் கவனித்து, உடல் நலிவுற்றபோது உடனிருந்து பாதுகாத்து, தம் வீட்டில் செய்த உணவுப் பண்டங்களைக் கொண்டு வந்து கொடுத்து, அவர்கள் சோர்வுற்றபோது பாட்டுப்பாடி மகிழ்வித்து, ஒரு மாதத்தில் அவர்கள் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்று விட்டார். அவர்கள் விடைபெறும் நாள் வந்தது. மாணவர்களும் பெரியவரும் மௌனத்தில் உறைந்திருந்தனர்; திடீரெனக் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு பெரியவருக்குக் கையசைத்தனர். அவரும் அழுத வண்ணம் விடை கொடுத்தார். ஒருமாதம் கழித்துப் பெரியவர் கிராமத்தில் செய்த இனிப்புக்களை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு கல்லூரிக்கே வந்துவிட்டார். "பொடியன்கள் போனபின் கிராமத்தில் கலகலப்பே போச்சு" என்று அவர் ஆசிரியர்களிடம் கூறினார். களத்தில்

இத்தகைய தொடர்பு ஏற்பட்டு விடுமானால் இதனைவிட வெற்றிக்கு வழிவகுப்பது வேறொன்றுமில்லை.

களத்தொடர்பில் அன்பு, பாசம், நட்பு போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கலாம். ஆனால், பணம் கடன்வாங்கல் கொடுத்தல் போன்றவை சிக்கலை விளைக்கும். நாம் செல்லும் களத்திற்கு முற்றிலும் வேறுபட்ட மிக ஆடம்பரமான வாழ்க்கையை அங்கு மேற்கொள்ளக் கூடாது.

## 4. கள ஆய்வு முறைகள்

கள ஆய்வு செய்வோர் மொழியை மட்டுமே உரிய கருவியாக எண்ணி அதன் வழியாகப் பெறும் மெய்ம்மைகளை மட்டுமே ஏற்கும் மனநிலையைப் பெற்றுவிடக் கூடாது. களத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கூர்மையாகப் பார்க்க வேண்டும். மனிதர்களின் பேச்சிலிருந்து அறிவதைவிட அவர்களின் மௌனத்திலிருந்து அசைவிலிருந்து அதிகம் அறிய வாய்ப்பிருக்கிறது.[1] கள ஆய்வில் 1. தனி மனிதரை நேர்காணல் 2. பத்துப் பதினைந்து பேர்களின் நடவடிக்கைகளை ஆராய்தல், 3. ஒரு பெருங்கூட்டத்தை அல்லது ஓர் ஊர் மக்களின் போக்கை ஆராய்தல் என மூன்று வகை ஆய்வுகள் உள்ளன. ஒவ்வோர் ஆய்விற்கும் தனித்தனி நோக்கு முறை வேண்டும். விலங்கு பறவையினங்களை ஆராய்தல், தாவரங்களை ஆராய்தல் ஆகியவையும் மேற்குறித்த தனிமனித, குழு, சமூக ஆய்வுகளிலிருந்து வேறுபடும். தனிமனிதனாக இருக்கும் போது ஒருவன் ஒருவகையாகவும் சமூக உறுப்பினனாக இருக்கும்போது ஒருவகையாகவும் நடந்து கொள்வான். எனவே களம், ஆய்வுப்பொருள் இவற்றின் அடிப்படையில், ஒவ்வொருவரையும் குறித்த ஆய்வு நிகழ்த்தப்பெற வேண்டும். எல்லாக் கள ஆய்வுகளுக்கும் ஒரு பொதுவான ஆராய்ச்சி முறையைச் சுட்டலாமேயன்றி ஒவ்வொரு கள ஆய்வுக்குமுரிய ஆய்வுமுறையைத் தனித்தனியே வரம்பிட்டு உரைத்தல் இயலாது. கள ஆய்வு மேற்கொள்வோரே, அவ்வக்களங்களுக்குரிய தனி முறைகள், விதிகள், விதிவிலக்குக்கள் ஆகியன குறித்து வரையறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தனிமனிதரைக் குறித்து ஆராயும் ஆராய்ச்சி ஓரளவு எளிமையானதே. முதலில் காண்போரிடம் இசைவுபெறல், முன்னரே நாள் நேரம் இடம் பற்றி அவரிடம் கேட்டு அறிந்து கொள்ளுதல் ஆகியன முறையாகும். ஒருவரை நேர்காணச் செல்லும்போது வேறு எவரையாவது அழைத்துப் போவதெனில் அவர் எந்த அளவு தேவைப்படுகிறார் என்பதைக்

1. Indeed there are some subtle behaviours that provide significant clues to what people are thinking and feeling. -William Foote Whyte, Op.cit. P. 83.

கருதிப்பார்க்க வேண்டும். சில சமயங்களில் நம்மால் நேர்காணப் பெறுபவர் அதனை விரும்பாமல் இருக்கலாம். சிலசமயங்களில் அவருக்கு நெருக்கமான உள்ளூர்க்காரர் ஒருவர் அழைத்துச் செல்லப்படுவதால் அவர் மிகமகிழ்ந்து நேர்காணலை மிக இயல்பாக நிகழ்த்தலாம்.

சண்டையிட்டுக்கொள்ளும் வெவ்வேறு குழுக்கள், தீராப்பகை கொண்டுவிட்ட குடும்பங்கள், ஒருவரை ஒருவர் வெறுக்கும் சாதிய நம்பிக்கையினர், எந்த நேர்காணலுக்கும் உட்படுவதில்லை எனக் கட்டுப்பாடு விதித்துக் கொண்டவர்கள், பொய்யான தகவலைத் தந்து திசைமாற்றுவோர் ஆகிய பிரிவினரை நேர்காண முயற்சி செய்வதும், கள ஆய்வுக்கு உட்படுத்துவதும் தொல்லை மிக்க செயல்களாயினும் தகுந்த உத்திகளோடு விடாது முயல்வது நலம் பயக்கும்.

பத்துப் பதினைந்து பேர்கள் கொண்ட ஒரு குழுவை ஆராய்கையில், அவர்களைத் தனித்தனியே ஆராய்தல், கூட்டாக ஆராய்தல், அவர்களைச் சாராத பிறர்நடுவில் ஆராய்தல் என மூவகையாக ஆராய வேண்டிவரலாம். ஒரு குற்ற வழக்கில் கைதான பத்துப் பேரைத் தனித்தனியே ஆராய்தல், ஒரு சேர ஆராய்தல், ஊரார் பிறர் பார்வையில் அல்லது காவல்துறையினர் பார்வையில் ஆராய்தல் ஆகியன குறிப்பிடத்தக்க முடிவுகளைப் பயக்கலாம்.

தொல்பொருள் ஆய்வில், இடம்பெறும் அகழாய்வு அதற்கெனத் தனிமுறைகளையும், உத்திகளையும் தொழில் நுட்பங்களையும் கொண்டது. மண்படிவுகள் பல்வேறு காலப் பகுதிகளைக் காட்டுதலைக் கண்டறிதல், இடிபாடுகள் ஏற்படாவாறு தோண்டுதல், கிடைக்கும் பொருட்களை வகைப்படுத்துதல், கிடைக்கும் பொருள் ஒவ்வொன்றையும் வரலாற்றோடு பொருத்திப் பார்த்தல், உணர்ச்சிக்கும் சொந்தக் கருத்துக்கும் தன் ஆர்வத்திற்கும் இடம் கொடுத்துவிடாத அணுகுமுறையை மேற்கொள்ளுதல் ஆகியன இக் கள ஆய்வில் பின்பற்றத் தக்கனவாகும். கள ஆய்வு முறைகளில் அறிஞர் டக்ளஸ் கூறுவன மிகவும் கருதத்தக்கன.

கள ஆய்வில் உண்மையில் நாம் நுழைகிறோம் என்பதைவிட ஊடுருவுகிறோம் என்று கூறலாம்.[1] சில சமயங்களில் ஒற்றராகவும், சில சமயங்களில் களத்தில் இருப்பவர்க்குச் சமூக சேவைசெய்பவராகவும், உற்ற தோழராகவும் நடந்து கொள்ளும் நிலையை ஆய்பவர் மேற்கொள்ள வேண்டும்.

கள ஆய்வு முறை ஒவ்வொரு சமூக அமைப்புக்குத் தக மாறுபடும். நகரத்தவர், கிராமத்தவர், பொருளாதார வளமுடையோர், பொருளாதார

1. Rather than seeking entry, we infiltrate the setting. Jack D. Douglas **Investigative social research.** P. 167.

நிலையில் எளியோர், கற்றவர், கல்லாதவர், பண்பாடு மிக்கவர் குறைந்தவர், சமய சாதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர் உட்படாதவர், ஆகிய வேறுபட்ட மக்களுக்குத்தகக் கள ஆய்வு முறை உருக்கொள்ளும்.

## 5. நேர்காணல் உத்திகள்

நேர்காணலை மேற்கொள்ளும் போது ஆய்பவர் கீழ்க்கண்டவற்றை உறுதியாகப் பின்பற்ற வேண்டும். 1. திட்டமிட்ட நேர்காணலுக்குரிய ஏற்பாடுகள். 2. திட்டமிடாத நேர்காணலாயின் பின்பற்றத்தகும் ஒழுங்குகளை அவ்வப்போதே மனத்தில் ஒழுங்கு செய்து கொள்ளுதல் 3. நேர்காணப் பெறுபவரே மிகுதியாகப் பேசும் நிலையை உருவாக்குதல் 4. நேர்காணப் பெறுபவரை உணர்ச்சிவயப்படச் செய்யாமை, 5. நேர்காணலைப் பதிவு செய்தல் 6. நேர்காணப்பெறுபவரோடு இணக்கமான (Cordial) உறவை நேர்காணலில் கடைப்பிடித்தல் 7. நேர்காணப்பெறுபவரைப் புண்படுத்தும் வகையில் கேளாமை. 8. நேர்காணப்பெறுபவரை வழக்குமன்றிலும் காவல்நிலையத்திலும் வழக்கறிஞர் கேட்பது போல் கேள்வி கேளாமை. 9. நேர்காணலின் நோக்கைக் காணப்பெறுபவர்க்குத் தெளிவுறுத்தல். 10. நேரான வினாக்கள், குறிப்பான வினாக்கள் மறைமுகவினாக்கள், ஓரிரு சொற்களில் விடைபெறும் வினாக்கள், நெடிய உரை தேவைப்படும் வினாக்கள், தலையசைப்பு மௌனம் போன்றவற்றிற்கு உள்ளாகும் வினாக்கள் எனப் பல வகையில் உருவாக்கிக் கொண்ட வினாக்களால் உண்மையறிய முயலல் ஆகியன நேர்காணலுக்குரியன.

நேர்காண்போர் நேராக ஓர் ஊரில் ஒரு தெருவில் ஒரு வீட்டின் கதவை இரவிலே தட்டி அவர்கள் திறந்தவுடன் உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்று கேட்பது எவ்வளவு தவறுடையது என்பது எல்லார்க்கும் தெரியும். மிகப்பெரிய உளவியல் வல்லுநர் போல நேர்காண்போர் செயலாற்ற வேண்டும்.

நேர்காணலில் திட்டமிட்டு நிகழ்த்தல், திட்டமிடாது இயல்பாக நிகழ்த்தல் என இருவகையாக நிகழ்த்தும் முறைகள் உண்டு. நாள் நேரம் குறித்துக் கொண்டு, இசைவு கேட்டு, வினாக்களை நிரல் செய்து கொண்டு ஓர் அலுவலகப் பணி (Official routine) போல நடத்துதல் முதல்வகையைச் சார்ந்தது. புகைவண்டியில் தற்செயலாக உடன் வருபவரிடம் நேர வரையறையின்றிப் பல செய்திகளைக் கேட்டறிதல், கலவரத்தில் பாதிககப்பட்ட ஒருவரைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு மெரினா கடற்கரையில் தற்செயலாய்க் கண்டவிடத்தில் யார் எவரென அறிந்து பல நிகழ்ச்சிகளை உசாவியறிதல், சொற்பொழிவாற்ற வந்தவர் சொற்பொழிவு முடித்து இனி உங்கள் கேள்விகளைக் கேட்கலாம் என்றபோது பலர் வினாக்களைக் கேட்கச் சொல்லப்பெற்ற கருத்துக்கள் ஆகியவை இரண்டாம் வகைக்குரியன. கள

ஆய்வில் உத்திகளை விடக் கேட்கப்பெறுவோர் மனநிலையே இன்றியமையாதது. அவர் அதிகமாகப் பேசாத நிலையிலும் அவரின் மனநிலையைப் புரிந்து கொண்டு முகத்திலும், மெய்ப்பாடுகளிலும் அவர் கூறக் கருதுவன யாவை என்பதை அறிவுமிக்க நேர்காண்பவர் புரிந்துகொள்ள முடியும்.[1]

## 6. கள ஆய்வு அறம்.

சந்திக்காத ஒருவரைச் சந்தித்தேன் எனக் கூறிக் கேட்காத கேள்விகளையும், கூறாத விடைகளையும் கோவைப்படுத்தி ஒரு போலியான கள ஆய்வு ஆவணத்தை உருவாக்கிக் காட்டுதல் மாபெரும் குற்றமாகும். ஆராய்ச்சி என்பது மெய்ம்மையைக் காண்பது; அதில் பொய்ம்மை புகக்கூடாது. கள ஆய்வின் எல்லா நிலைகளிலும் உண்மை, உண்மையைத் தவிர வேறின்மை வேண்டும். கள ஆய்வின் முடிவுகள் நம் கருதுகோளைப் பொய்யாக்கலாம். முன்கண்ட பற்பல முடிவுகளைத் தவறானவை என்று காட்டுவதாக அமையலாம். இவற்றில் மனந்தளர்ந்து கள ஆய்வு தெரிவித்த செய்திகளை மாற்றுதல் அறமாகாது. அறிஞர் ஒருவர் நேர்காணலில், தாம் மூன்று முறை பாரதியாரைச் சந்தித்ததாகக் கூறித் தாம் சந்தித்த நாட்களையும் குறிப்பிட்டார். அவர் சென்னையில் பாரதியாரைச் சந்தித்ததாகச் சொன்னநாளில் பாரதியார் சென்னையில் இல்லை. எனவே நேர்காணப் பெறுபவரும் பொய்கூறாது உண்மையே கூறவேண்டும். அவர் கூறுவது பொய்யா மெய்யா என்று அறியும் திறத்தை நேர்காண்பவர் பெறவேண்டும்.

ஆர்வ மேலீட்டால் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓட்டைக் கரிகாலன் கால ஓடாகக் காட்டுதல், தொல்பழங்காலத்துப் பொருளை ஆராயும் வன்மையின்றி அண்மையதாகக் கூறுதல், முற்ற முடிய சோதனைகளுக்குட்படுத்தாமல் பொருள்களின் தன்மை காலம் ஆகியன குறித்து விரைந்த நிலையில் கருத்துக் கூறல், நேர்காணப் பெறுபவர் கூறும் செய்திகளைச் சரியாகக் கேட்டுப் பதியாமை ஆகியன கள ஆய்வு மேற்கொள்பவர் கொள்ளக் கூடாத செயல்களாம். கள ஆய்வு அறமறிந்தோர், இவற்றை ஒழுங்குற ஆற்றுவர்.

கள ஆய்வுக்கு உதவியவர், உடன்பணி புரிந்தவர், சிக்கல்களுக்குத் தீர்வுகாண வழிகாட்டியோர் ஆகியோரை மறவாமல் ஆய்வில் குறிப்பிடுவது ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டிய அறமாகும்.

1. Being able to choose the best approach is not always assured, no matter howmuch experience you might have. You can increase your chances by using the observation skills... to carry out rapid ... as it is being generated...